DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# OS . No. 246/2021

Deposition of Witness : PW1

| | |
|---|---|
| Name - கனிஷ்கர் | Father's Name - ஜோதிகணேஷ் |
| Village\City - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2023.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்

**3 வது பி.வா.கு.வி.: தொடர்ச்சி**

கேள்வி : உங்களுடைய தகப்பனாரிடம் OS No.72/1996 மற்றும் AS No.49/1999 ஆகிய வழக்கு நடவடிக்கைகள் பற்றி கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் ?

பதில் : உடல்நிலை சரியில்லாததால் கேட்கவில்லை.

கேள்வி : உங்கள் தகப்பனாருக்கும் உங்கள் தாத்தாவிற்கும் இடையே வழக்குரை சொத்து சம்பந்தமாக 1996 முதல் பிரச்சனை இருந்து வந்தது என்று சொன்னால்?

பதில் : அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது.

கேள்வி : வழக்குரை சொத்து சம்பந்தமாக ஏற்கனவே உங்கள் தகப்பனாருக்கும் உங்கள் தாத்தாவிற்கும் 1996 ஆண்டு முதல் இருந்து வந்தது உங்களுக்கு இந்த தாவா சொத்தை கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை ?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள்?

பதில் : மொத்தம் ஐந்து பேர்கள், மூன்று ஆண்கள் மற்றும் 2 பெண்கள்.

கேள்வி : உங்கள் தாத்தா எந்த வருடம் இறந்து போனார் என்றால்?

பதில் : 2020 ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதம்.

கேள்வி : உங்கள் தாத்தா இறந்து போன சரியான தேதி உங்களுக்கு சரியாக சொல்ல தெரியவில்லை.?

பதில் : ஞாபகமில்லை.

கேள்வி : ஏற்கனவே பிரதிவாதியின் தாயார் வெள்ளைதாயம்மாள் தாக்கல் செய்து இருந்த OS No. 37/2009 வழக்கில் உங்கள் தாத்தா வழக்குரை சொத்தின் சுவாதீனம் வெள்ளைதாயிடம் இருப்பதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில் , தற்போது உங்கள் தாத்தா வழக்குரை சொத்தின் சுவாதினத்தை உங்களிடம் ஒப்படைக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால்?

பதில் : அந்த எதிர்வழக்குரையில் என் தாத்தா அப்படி சொல்லவில்லை. சொத்தின் சுவாதீனத்தை என் தாத்தா என்னிடம் ஒப்படைத்தார்.

கேள்வி : அந்த அசல் வழக்கு 37/2009 எதிர்வழக்குரையில் வழக்குரை சொத்தின் சுவாதீனத்தை செல்வம் மற்றும் தனசேகரனிடத்தில் வட்டிக்கு பதிலாக தேங்காய் வெட்டுவதற்காக சுவாதீனத்தை கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளார் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் தாத்தா 2009ம் ஆண்டு முதல் வழக்குரை சொத்தில் தென்னந்தோப்பு இருப்பதாக எதிர்வாதம் செய்துள்ளார் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்களுக்கு உங்கள் தாத்தா எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் தென்னந்தோப்பு இருப்பதாக சொல்லபடவில்லை ?

பதில் : தென்னந்தோப்பு அவ்வளவு முக்கியத்துவமாக அந்த பத்திரத்தில் போட வேண்டும் யாரும் சொல்லவில்லை.

கேள்வி : கிரைய சொத்தானது தென்னந்தோப்பு என்று காட்டும் பட்சத்தில் கூடுதலாக முத்திரை கட்டணம் செலுத்த வேண்டும் என்று சொன்னால் ?

பதில் : அது பற்றி எனக்கு தெரியாது.

கேள்வி : நீங்கள் உங்கள் பேரில் எழுதி வாங்கிய வாசாஆ1 கிரைய பத்திரமானது உங்கள் தாத்தாவின் வயோதிகத்தால் நலிவடைந்த நிலையில் அதை பயன்படுத்தி மோசடியான முறையில் உற்பத்தி செய்த கிரைய பத்திரம் என்பததால் தான் தென்னந்தோப்பை பற்றி கூறவில்லை ?

பதில் : சரியல்ல.

கேள்வி : OS No. 37/2009 வழக்கின் சொத்தின் சுவாதீனமானது தன் வசம் இல்லை என்று உங்கள் தாத்தா விஸ்வநாதன் சொல்லியுள்ள நிலையில் இந்த வழக்கானது காலவரையற்ற சட்டத்தின் படி தள்ளுபடி செய்யதக்கது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் தாத்தாவிற்கும் , பிரதிவாதியின் தாயார் வெள்ளைதாயம்மாளுக்கும் ஏற்பட்ட கிரைய அக்ரிமெண்டில் உங்கள் பாட்டியும் , உங்கள் பெற்றோர்களும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : OS No.37/2009 வழக்கில் தீர்ப்புரையை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை இந்த வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்யாமல் இருப்பதற்கு எதாவது சிறப்பான காரணம் உண்டா என்றால்?

பதில் : தீர்ப்புரை மட்டும் போதும் என்று என் வழக்கறிஞர் சொன்ன காரணத்தினால் நான் தாக்கல் செய்யவில்லை.

கேள்வி : OS No.37/2009 வழக்கில் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையில் வழக்குரை சொத்தின் சுவாதீனமானது வெள்ளைதாயம்மாள் வசம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ள விபரமானது இந்த வழக்கிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்ற காரணத்தினால் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS No.65/2017 வழக்கை நீங்கள் 2017 ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : 2017 ம் ஆண்டிற்கு முன்பு வழக்குரை சொத்தின் சுவாதீனமானது உங்களிடம் இருந்து வந்தது என்பதற்குரிய ஆவணம் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

கேள்வி : அடங்கல் நீங்கள் எதற்காக உங்கள் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்?

பதில் : அனுபவத்தை காட்ட கூடிய ஆவணமாக நான் தாக்கல் செய்துள்ளேன்.

கேள்வி : நீங்கள் உங்கள் தரப்பு அடங்கல் ஆவணமாக வாசாஆ 3 , வாசாஆ 8 மற்றும் வாசாஆ 9 யை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : வழக்குரை சொத்தின் சுவாதீனத்தை 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் உங்களிடம் இருந்து பிரதிவாதிகள் எடுத்து கொண்டார்கள் என்று வழக்கில் சொல்லியுள்ளீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்களுடைய வழக்கின் படி 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் வழக்குரை சொத்தின் பிரதிவாதியின் வசம் உள்ளது என்று சொன்னால்?

பதில் : சரிதான்.

கேள்வி : நீங்கள் 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாத இறுதி முதல் வழக்குரை சொத்தில் பிரதிவாதிகள் விவசாயம் செய்து தேங்காய் வெட்டி அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால்?

பதில் : மொத்தம் சொத்தும் பிரதிவாதிகள் அபகரித்து வைத்து இருக்கிறார்கள்.

கேள்வி : 2016ம் ஆண்டு முதல் வழக்குரை சொத்தின் சுவாதீனமானது பிரதிவாதிகளிடம் உள்ளதாக சொல்லும் நிலையில் வாசாஆ 3 ஆவணத்தில் 2017 ஆம் ஆண்டு வழக்குரை சொத்தின் சுவாதீனமானது உங்கள் வசம் உள்ளதாக வாசாஆ 3 ஆவணம் தாக்கல் செய்தது தவறு என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : அதே போல வாசாஆ 8 மற்றும் வாசாஆ 9 ஆவணங்களில் வழக்குரை சொத்தில் நீங்கள் விவசாயம் செய்து அனுபவிப்பதாக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய்யான ஆவணங்கள் என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : எப்படி உங்கள் தாத்தா வாசாஆ 1 ஆவணத்தை ஏமாற்றி உற்பத்தி செய்துள்ளீர்களோ அதே போல சமூகம் நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் வாசாஆ 3 , வாசாஆ 8 மற்றும் வாசாஆ 9 ஆவணங்களை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் உங்கள் வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் வழக்குரையில் பிரதிவாதிகள் உங்கள் சொத்தை அபகரிக்க முயற்சி செய்வதாக சொல்லியுள்ளீர்களா என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : பிரதிவாதிகள் உங்கள் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று வழக்குரையில் சொல்லிவிட்டு தற்போது அவர்களுக்கு ஏன் பணம் கொடுக்க முன் வருகீறிர்கள் என்றால்?

பதில் : அவ்வாறு நான் பணம் கொடுக்க முன்வரவில்லை .

கேள்வி : பிரதிவாதிகளுக்கு பணம் கொடுப்பதாகவும் , அவர்களை சொத்தின் சுவானதீனத்தை உங்களிடம் ஒப்படைக்குமாறு சமுதாய பெரியோர்கள் மூலம் கேட்பதாக வழக்குரையில் சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால்?

பதில் : சரியல்ல. சுவாதீனத்தை என்னிடம் ஒப்படைக்குமாறு மட்டும் கேட்டேன்.

கேள்வி : மீண்டும் ஒரு முறை உங்கள் வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்து சாட்சி சொல்ல வருகீறிர்களா என்றால்?

பதில் : நான் ஏற்கனவே படித்து விட்டு தான் சாட்சி சொல்லி கொண்டு இருக்கிறேன்.

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 07.10.2023 அன்று சனிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2023.10.09 16:37:23 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
07.10.2023.